கொண்டிருக்கின்றன. காலதாமதம் எங்களால் இல்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் சொன்னவுடன் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். தொழிற்சாலை வருவதற்குள் நம்முடைய மக்களைத் தயாராக்கும் சூழ்நிலை இருக்கிறது. இன்று ப்ரிஃபாப்ரிகேடெட் மாதிரி வீடுகளைக் கட்டியிருக்கிறோம். அதற்கு டிமாண்ட் அதிகமான அளவு வரவில்லை. அது வந்தவுடன் இந்தத் தொழிற்சாலை அமைவது நல்லது என்று அரசு கருதுகிறது.

தொழிலாளர் வீட்டு வசதித் திட்டம்

* 639 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) & (இ) இல்லை. இருப்பினும் இம் மாநிலத்தில் தொழிற்சாலைகளில் பணி புரியும் தொழிலாளர்களுக்கான வீட்டு வசதி மானியத் திட்டம் Subsidised Industr ial Housing Scheme.) செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் தொழிலாளர்கள் தொழிற்சாலைகளுக்குச் சென்றுவர வசதியாக மையமாக அமைந்துள்ள பகுதியில் பொதுவாக குடியிருப்புகள் கட்டப்படுகின்றன.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இந்தத் திட்டம் ஏற்கனவே ஏழு ஆண்டுகளுக்கு முன்பே அமலுக்குக் கொண்டுவரப்பட்ட திட்டம். திராவிட முன்னேற்றக் கழக அரசு வந்த பிறகு இதை விரிவாக்கும் என்று கருதினோம். இன்னும் அது விரிவாக்கப்படாமல் அப்படியே இருந்து கொண்டிருக்கிறது என்று இப்போது சொல்கிறார்கள். ஏற்கனவே திரு. வி. க. நகரில் தொழிலாளர்களுக்காகக் கட்டப்பட்ட வீடுகள் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. ஒன்று கட்டிமுடித்த வீடுகள் பழுதுபார்க்கப்பட வேண்டும், இல்லையென்றால் இன்னும் ஏராளமான வீடுகளைத் தொழிலாளர்களுக்குக் கட்டிக்கொடுக்கவேண்டும். அதற்கு இந்த அரசாங்கம் என்ன திட்டத்தை வைத்துக்கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: விரிவாக்கவில்லை என்று நான் எங்கும் குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. நிறைய வீடுகளைக் கட்டிக்கொண்டு வருகிறோம். முன்னால் தனிப்பட்ட வீடுகள் தொழிலாளர்களுக்குக் கட்டப்பட்டு வந்தன. இப்போது இடத்தின் அதாவது நிலத்தின் விலை ஏறிக்கொண்டிருப்பது அனைவருக்கும் தெரியும். ஆகவே தொழிலாளர்களுக்குத் தனிப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக மாடி வீடுகள் கட்டவேண்டுமென்று அரசு விரும்புகிறது. தொழிலாளர் நல இலாகாவும் விரும்புகிறது. ஏற்கனவே இருக்கிற வீடுகளை இடித்துக் கட்டவேண்டிய ஒரு சூழ்நிலையும் இருக்கிறது. பழுதடைந்த வீடுகள் சிலயிடங்களில் இருக்கின்றன. அந்தத் தொழிலாளர்கள் அந்த வீடுகள் தங்களுக்குச் சொந்தமாக இருப்பதுபோல் பாவித்து காலதாமதத்தை ஏற்படுத்துகிறார்கள். அந்தச் சூழ்நிலை மாறுமானால் நிரம்ப வீடுகள் கட்ட முடியும். நிறைய வீடுகள் ஏற்கனவே கட்டிக் கொண்டும் வருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சு. துரைசாமி: தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே வீடுகள் கட்டுவதற்கு சம்பந்தப்பட்ட தொழில் அதிபர்கள் வீட்டு வசதி வாரியத்துக்குக் கடிதம் எழுதினால் வீட்டுவசதி வாரியம் ஒப்புக்கொண்டு அங்கு வீடுகளைக் கட்டலாம் அல்லவா? அதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ஏற்கனவே மதுரையில் கூட ஒரு ஆலை அதிபர் தன் நிலத்தைக் கொடுத்திருக்கிறார்கள். வீட்டு வசதி வாரியம் தொழிலாளர்களுக்கான வீடுகளைக் கட்டிக் கொண்டு வருகிறது. தனியாக தொழில் அதிபர்கள் தொழிலாளர்களுக்காக வீடுகள் கட்டினால் 50 சதவீதம் கடனும், 25 சதவீதம் உதவித் தொகையும் ஆட்சி அளித்து வருகிறது.

பீடித் தொழிலாளர்கள்

*640 **வினா—திரு. ஜி. ராமசாமி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வடார்க்காடு மாவட்டத்தில் பீடித் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்குக் குறைந்த அளவு ஊதிய விதம் வரையறுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?